தலைப்பு 332 – தேசிய சமூக நீர் வழங்கல் திணைக்களம்

1. நிதிக் கூற்றுக்கள்

1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

தலைப்பு 332 – தேசிய சமூக நீர் வழங்கல் திணைக்களத்தின் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப் பாய்ச்சல் கூற்றுடன் கூடிய 2024 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 11(1) ஆம் பிரிவின் பிரகாரம் தேசிய சமூக நீர் வழங்கல் திணைக்களத்தின் நிதிக் கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் உள்ளடங்கிய பொழிப்பறிக்கை 2025 மே 28 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு சட்டத்தின் 11(2) ஆம் பிரிவின் பிரகாரம் அரச நிதி திணைக்களத்திற்குரிய விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2025 யூன் 11 ஆந் திகதி பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படுகின்றது.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களின் தாக்கம் தவிர தேசிய சமூக நீர் வழங்கல் திணைக்களத்தின் நிதிக் கூற்றுக்கள் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமை, நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று என்பவற்றிற்கான குறிப்பு 1 இல் குறிப்பிடப்பட்டுள்ள கூற்றுக்களை தயாரிப்பதற்கான அடிப்படைக்கு இணங்க அனைத்து பொருண்மையானவை தொடர்பிலும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அறிக்கை முனைப்பழியாக்கப்படுகின்றது. இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக் கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

1.3 விடயமொன்றை வலியுறுத்தல் - நிதிக் கூற்றுக்களை தயாரிப்பதற்கான அடிப்படை

இந்த நிதிக் கூற்றுக்களை தயாரிக்கும் அடிப்படையை விபரிக்கும் நிதிக் கூற்றுக்களுக்குரிய குறிப்பு 1 தொடர்பில் கவனம் செலுத்துமாறு கோருகின்றேன். நிதிக் கூற்றுக்கள் அரசின் நிதிப் பிரமாணம் 150 மற்றும் 151 மற்றும் 2025 பெப்ரவரி 21 ஆந் திகதி திருத்தப்பட்ட 2024 திசெம்பர் 16 ஆந் திகதிய அரச கணக்குகள் வழிகாட்டி இலக்கம் 06/2024 இன் பிரகாரம் தேசிய சமூக நீர் வழங்கல் திணைக்களத்தினதும் பொதுத் திறைசேரியினதும் பாராளுமன்றத்தினதும் தேவைப்பாட்டுக்காக தயாரிக்கப்பட்டுள்ளது. அதனால், இந்த நிதிக் கூற்றுக்கள் வேறு நோக்கங்களுக்கு பொருத்தமற்றதாக இருக்கக்கூடும். எனது அறிக்கை தேசிய சமூக நீர் வழங்கல் திணைக்களத்தினதும் பாராளுமன்றத்தின் பொதுத்

திறைசேரியினதும் பாராளுமன்றத்தினதும் பயன்பாட்டிற்காக மாத்திரம் நோக்கமாக கொண்டுள்ளது. இந்த விடயம் தொடர்பில் எனது அபிப்பிராயத்தில் எந்த மாற்றமும் ஏற்படாது.

1.4 நிதிக் கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும், கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பு

அரசின் நிதிப் பிரமாணம் 150 மற்றும் 151 மற்றும் 2025 பெப்ரவரி 21 ஆந் திகதி திருத்தப்பட்ட 2024 திசெம்பர் 16 ஆந் திகதிய அரச கணக்குகள் வழிகாட்டி இலக்கம் 06/2024 இன் பிரகாரம் அனைத்து பொருண்மையானவை தொடர்பிலும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக் கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று அற்ற நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச்சட்டத்தின் 16(1) பிரிவின் பிரகாரம் தேசிய சமூக நீர் வழங்கல் திணைக்களத்தினால் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக் கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகளை பேணிச் செல்லல் வேண்டும்.

தேசிய கணக்காய்வுச் ˙சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் தேசிய சமூக நீர் வழங்கல் திணைக்களத்தின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்று தயாரிக்கப்பட்டு பேணிச் செல்லப்படுவதனை கணக்கீட்டு உத்தியோகத்தர் (பொருத்தமான வகையில்) சான்றுறுதிப்படுத்த வேண்டியதுடன் அம்முறைமையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று மேற்கொள்ளப்பட்டு அதற்கமைய அம்முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் மேற்கொள்ளப்படல் வேண்டும்.

1.5 நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பொழிப்பு அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும், இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களில் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன், அதன் பொருண்மை தன்மையை இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் எடுக்கப்படும் பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்பட வேண்டும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் ஒரு பகுதியாக துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- வெளியிடப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றை பெற்றுக் கொள்ளும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய

ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும், போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன், தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பாக அபிப்பிராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாகக் கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்களை பொருத்தமான மற்றும் நியாயமான முறையில் நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளமையை மதிப்பாய்வு செய்தல்.

- ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பிக்கும் போதும், நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாகக் கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாக,

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டது.

1.6 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

(அ) ஆதனங்கள் பொறித்தொகுதிகள் மற்றும் உபகரணங்கள்

ஆதனங்கள் பொறித்தொகுதிகள் மற்றும் உபகரணங்களை கணக்கீடு செய்யும் போது பின்வரும் குறைபாடுகள் கண்டறியப்பட்டது.

	கணக்காய்வு அவதானிப்பு	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
(i)	நிதிக் கூற்றுக்களில் நிதி அல்லாத சொத்துக்கள் தொடர்பான அறிக்கையில் போக்குவரத்து உபகரண மீதியில் ரூபா 10,700,000 பெறுமதியான வேறு நிறுவனங்களுக்குரிய 04 மோட்டார் வாகனங்களும் அடங்கியிருந்தன.	GD-2179, GD-2233 மற்றும் PA-3674 ஆகிய கெப் வண்டிகளை இத்திணைக்களத்திற்கு கையேற்பதற்கு நீர் வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி அமைச்சிற்கு 2024.08.26 ஆந் திகதி கடிதம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. GB – 0066 ஆம் இலக்க	பயன்படுத்தப்படுகின்ற வாகனங்களை உரிய நிறுவனங்களிடம் இருந்து கையேற்பதற்கு அல்லது உரிய நிறுவனங்களுக்கு மீண்டும் கையளிப்பதற்கும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

		வாகனத்தை கையேற்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது.	
(ii)	நீர் வழங்கல் மற்றும் ஆரோக்கிய சுகநலன் அபிவிருத்தி திட்டம் (WASSIP) மூலம் திணைக்களத்திற்கு கையளிக்கப்பட்டிருந்த 53 மோட்டார் சைக்கிள்களுக்கான மதிப்பீடு செய்து கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.	இந்த 53 மோட்டார் சைக்கில்களின் உரித்து பணிப்பாளர் நாயகம் தேசிய சமூக நீர் வழங்கல் திணைக்களத்தின் பெயரில் 2024 ஒக்தோபர் 14 ஆந் திகதி பதிவு செய்யப்பட்டுள்ளன. இந்த 53 வண்டிகளின் பெறுமதி மதிப்பீடு செய்யப்பட்டு பெறுமதியினை பெற்றுக் கொள்ள நடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லை.	இந்த மோட்டார் சைக்கில்களின் மதிப்பீடு செய்யப்பட்டு கணக்கீடு செய்யப்பட வேண்டும்.
(iii)	திணைக்களத்திற்கு கையேற்கப்படாதிருந்த ரூபா. 100,000 மற்றும் ரூபா. 200,000 பெறுமதியான 02 வாகனங்கள் நிலையான சொத்துக்கள் பதிவேட்டிலும் நிதிக் கூற்றுக்களிலும் காண்பிக்கப்பட்டிருந்தமை.	18-5063 மற்றும் GC–0258 ஆகிய ஓட்டத்தில் காணப்படாத இம் மோட்டார் வண்டிகளை கைதவிர்ப்பதற்கு உரித்தை கையேற்பதற்கு தேவையான நடவடிக்கைகளை மேற்கொண்ட பின்னர் நிதிப்பிரமாணம் 767(1) இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படும்.	ஓட்டத்தில் இல்லாத வாகனங்களின் உரித்தை கையேற்ற பின்னர் கைதவிர்ப்பதற்கோ அல்லது வாகனங்களை வேறு நிறுவனங்களுக்கோ வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

2 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவின் பிரகாரம், பின்வரும் விடயங்களை நான் வெளிப்படுத்துகின்றேன்.

(அ) நிதிக் கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் நேரொத்துள்ளன.

(ஆ) முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் தொடர்பாக என்னால் மேற்கொள்ளப்பட்ட பின்வரும் பரிந்துரைகள் செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை.

முன்னைய ஆண்டிற்குரிய அறிக்கையின் பந்தியுடன் தொடர்பு	செயற்படுத்தப்பட்டிருக்காத பரிந்துரை	இந்த அறிக்கையின் பந்தியின் தொடர்பு
1.6.1(ஆ)	நிதிக் கூற்றுக்களில் நிதியல்லாத சொத்துக்கள் தொடர்பான அறிக்கையில் ரூபா 73,207,500 தொகை பெறுமதியான போக்குவரத்து உபகரணங்களில் அடங்கியிருந்த ரூபா 10,700,000 தொகை பெறுமதியான ஏனைய நிறுவனங்களுக்கு	1.6.1(அ)(i)

சொந்தமான 04 மோட்டார் வாகனங்கள் முறைப் படி உரித்தாக்கி நிலையான சொத்துக்கள் பதிவேட்டில் உட்படுத்தப்பட வேண்டும்.

3. நிதி மீளாய்வு

3.1 செலவின முகாமைத்துவம்

கணக்காய்வு அவதானிப்பு	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதிப் பிரமாணம் 50 இன் பிரகாரம் சிக்கனம் மற்றும் செயல்திறன் குறித்து கவனம் செலுத்தாமல் மதிப்பீடுகள் தயாரித்திருந்த காரணத்தினால 01 மீண்டெழும் செலவின உருப்படிக்கும் 01 மூலதனச் செலவின விடயத்திற்கும் ஒதுக்கப்பட்ட ரூபா 2,100,000 மொத்த ஒதுக்கீடும், 09 மீண்டெம் செலவின விடயங்களுக்கும் ஒதுக்கப்பட்ட ரூபா 6,529,173 மற்றும் 02 மூலதனச் செலவின விடயங்களுக்கு ஒதுக்கப்பட்ட ரூபா 812,161,579, அதாவது 11 சதவீதம் முதல் 81 சதவீதம் வரை சேமிக்கப்பட்டிருந்தது.	தேசிய பாதீட்டு திணைக்களத்தின் 03/2022 ஆம் இலக்க சுற்றறிக்கையின் பிரகாரம் அரச செலவினத்தை மட்டுப்படுத்துதல், வாகனங்கள் சேவை செய்யாமை, அலுவலக கட்டிடங்கள் திருத்த செலவினம் ஏற்படாமை, கணினிக்காக மென்பொருள் உள்ளடக்கும் நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்படாமை, அரசு கொள்கையின் பேரில் மின்சார பட்டியல் மற்றும் நீர் கட்டணங்கள் குறைந்தமை, ஆதனக் கடன் பெற்றுக் கொள்ளலாமை, உத்தியோகத்தர்களின மொழிப் படிகளுக்காக கோரிக்கை ,ல்லாமை போன்ற காரணங்களின அடிப்படையில் அதிக நிதி ஏற்பாடு சேமிக்கப்பட்டு இருந்தது, நிதி ஏற்பாடு விழுப்புரம் மாவட்டமாக இனம் கண்டு மதிப்பீடு தயாரிக்கப்பட வேண்டியது தான் இது ஏற்பாட்டு புதிய திரைப்படமாக மேற்கொள்ள வேண்டும்	நிதிப் பிரமாணங்களுக்கு இணங்க நிதி ஏற்பாடுகளின் தேவைப்பாடுகள் அறுதியாக இனங்கண்டு மதிப்பீடு தயாரிக்கப்பட வேண்டியதுடன் ஒதுக்கீடு செய்த நிதிஏற்பாட்டை குறித்த நோக்கங்களுக்காக செயற்திறனாக ஈடுபடுத்த வேண்டும்..

3.2 பொறுப்புக்கள் கடப்பாட்டிற்கு உட்படல்

கணக்காய்வு அவதானிப்பு	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
2017 ஏப்ரல் 27 ஆம் திகதிய நிதி அமைச்சின் 255/2017 ஆம் இலக்க சுற்றறிக்கையின் (2)(அ), (ஆ)	2014 திசெம்பர் 31 உள்ளவாறு பொறுப்புக்கள் காணப்படவில்லை	சுற்றறிக்கையின் பிரகாரம் பொறுப்புக்கள் இனங்காணப்பட்டு

மற்றும் 03 ஆம் பிரிவுகுளின் பிரகாரம் கடப்பாடுகள் மற்றும் பொறுப்புகள், னங்காணப்பட்டு CIGAS நிகழ்ச்சி திட்டத்திற்கு உள்ளடக்க நடவடிக்கை எடுக்க வேண்டிய போதிலும், தெரிவு பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்ட 2025 ஆம் ஆண்டில் முதல் இரண்டு மாதங்களில் செலுத்தப்பட்ட 2024 ஆம் ஆண்டிற்குய ரூபா 12,567,607 ஆன பொறுப்புக்கள் தொடர்பாக அவ்வாறு செய்யப்பட்டிருக்கவில்லை,		நிதிக்கூற்றுகளில் காண்பிக்கப்பட வேண்டும்

3.3 ஏனைய அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களிலிருந்து வழங்கப்பட்டிருந்த ஏற்பாடுகளின் பயன்பாடு

கணக்காய்வு அவதானிப்பு	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
வீடமைப்பு மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சு மற்றும் நீர் வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி அமைச்சினால் கிராமிய நீர்ச் செயற்திட்டங்களை செயற்படுத்துவதற்காக 2024 ஆண்டின் போது வழங்கியிருந்த ரூபா 146,886,750 கூட்டுத்தொகை யான ஏற்பாடுகளில் ரூபா 39,789,235 அதாவது 27 சதவீதம் திணைக்களத் தினால் ஒதுக்கீடுகள் வழங்கியிருந்த செயற்பாடுகளுக்காக பயன்படுத்தப் பட்டிருக்கவில்லை.	மெனிக்கடவர நீர் செயற் திட்டத்தில் இடம்பெற்ற மண் சரிவு காரணமாக உருவாகிய சிக்கல்களின் பேரின் நிர்மாணங்கள் தாமதிக்கப் பட்டமை மழை நீர் தாங்கி நிர்மாணம் மற்றும் சிறுநீரக நோயாளர் நிவார நிகழ்ச்சி திட்டத்தின் கீழ் பட்டியல்களைச் சமர்ப்பிப்பதற்கு போதுமான காலம் என்று ,ல்லாமைமே தொழில்நுட்ப பத வியணயிணியில் காணஷப்படும் அதிகளவிலான பற்றாக்கறை செயன்முன்னேற்றத்தை அடைவதில தடையாக இருந்தது.	குறித்த நிதி ஏற்பாட்டை பயன்படுத்தி நடைமுறைச் சிக்கல்கள் காணப்படும் சந்தர்ப்பத்தில் அது தொடல்பாக உரிய நிறுவனங்களுக்கு முன்னரே தெரிவிக்க வேண்டியதுடன் வருடாந்த பாதீட்டு நிதி ஏற்பாட்டை செயற்திறனாக பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும் .

3.4 கணக்கீட்டு உத்தியோகத்தர்களினால் மேற்கொள்ளப்பட வேண்டிய உறுதிப்படுத்தல்கள்

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 38 ஆம் பிரிவின் ஏற்பாடுகளின் படி கணக்கீட்டு உத்தியோகத்தரினால் பின்வரும் விடயங்கள் தொடர்பாக உறுதிப்படுத்தல் மேற்கொள்ள வேண்டியிருந்த போதிலும் அதன்படி நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

கணக்காய்வு அவதானிப்பு	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
உள்ளகக் கணக்காய்வு கடமை உரிய முறையில் செயற்படுத்துவதற்காக ஆக்கபூர்வமான செய்முறையொன்று காணப்படுகின்றது என கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்த வேண்டியிருந்த போதிலும், அறிக்கையின் 5.1 பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள அவதானிப்புக்களின் படி அந்த தேவைப்பாடு நிறைவேற்றப் பட்டிருக்கவில்லை.	திணைக்களத்தின் பிரதான உள்ளகக் கணக்காய்வாளர் ஒருவரை பெற்றுக்கொள் வதற்காக 2025 ஏப்ரலர் 03 ஆந் திகதிய DNCWS/ADM/05/ 01/VOL-ii ஆம் இலக்க உரிய வேலண்டுகோள் கடிதம் செயலாளர், நகர அபிவிருத்தி நிர்மாணம் மற்றும் வீடமைப்பு அமைச்சின் மூலம் பணிப்பாளர் நாயகம், முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.	2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகார சட்டத்தின் 38 ஆம் பிரிவின் ஏற்பாடுகளுக்கு இணங்க செயற்பட வேண்டியிருந்தது.

3.5 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கங்களுடன் இணங்காமை

தெரிவுக் கணக்காய்வு பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள் விதிகள் மற்றும் பிரமாண ஏற்பாடுகளுடன் இணங்கியிருக்காத சந்தர்ப்பங்கள் கீழே பகுப்பாய்வு செய்து காண்பிக்கப்படுகின்றது.

	சட்டங்கள் விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு	அவதானிப்பு பெறுமதி (ரூபா)	இணங்காமைகள்	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
(அ)	இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதிப் பிரமாணக் கோவையின் நிதிப் பிரமாணக் கோவையின் 137 ஆம் இலக்க நிதிப்பிரமாணம்	9,862,045	நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் பொருட்கள் சரியாக பொறுப்பேற்று இருப்பதாக உறுதிப்படுத்தப்படுத்தாமல் 20 அச்சீட்டு இயந்திரங்களுக்காக 2024 திசெம்பர் 31- ஆம் திகதி 133619 ஆம் இலக்க காசோலை மூலம் கொடுப்பகவு செய்யப்பட்டுள்ளதுடன் அப்பொருட்கள் 2025 ஜூலை 31 ஆம் திகதி வரையிலும் திணைக்களத்துக்கு கிடைத்திருக்கவில்லை	கட்டளை இடமப்பட்ட சில இயந்திரங்கள் விதந்துரைகளுடன் பொருந்தாமையால் காசோலை வழங்கப்படவில்லை குறிக்க இயந்திரங்களை சரியாக பொறுப்பளிக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது	கட்டளை இடப்பட்ட பொருட்கள் உரிய வகையில் கிடைத்துள்ளதாக உறுதிப்படுத்தப் பட வேண்டும் நிதி பிரமாணங்களின் பிரகாரம் நடவடிக்கை எடுக்காத உத்தியோகத்தர்களுக்காக ஒழுகாற்று நடவடிக்கை

				எடுத்தல் வேண்டும்.
(ஆ)	2006 அரச பெறுகை வழிகாட்டல் கோவையின் 5.4.8 மற்றும் 8.9.3 ஆம் பந்திகள்	மேற்படி பொருட்கள் கொள்வனவின் போது வழங்குனருடன் உடன்படிக்கை மேற்கொள்ளப்படாமல இருந்ததால் பொருட்களை வவழங்க வேண்டிய திகதிகள் தொடர்பான இனக்காப்பால் ஒன்று இல்லாமல் இருந்ததுடன் அதற்குரிய செயலாற்றல் பிணை பெற்றுக் கொள்வதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில் லை அதன் பிரகாரம் அப்பொருட்கள் உரிய காலப்பகுதியில் வழங்காமல் இருந்ததால் வரும் சேதத்தை மேவுகைச் செய்துகொள்ள முடியாத இருந்தது.	பொருட்கள் 2014.12.31 இல் உள்ளவாறு அதற்கு முன்னால் மேற்கொள்ள வேண்டியதால் உடன்படி உடன்படிக்கை செய்யப்படவில்லை ல	அரசின் பெருகை வழிகாட்டல் சட்ட விதிகள் பிரகாரம் நடவடிக்கை எடுக்காத உத்தியோகத் தர்களுக்காக ஒழுக்காற்று நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(இ)	பெறுகை கைநூல் 7.9.2 (க) பந்தி	ஒப்பந்த பெறுமதி மற்றும் பொறியாளர் மதிப்பீட்டிற்கு இடையே கருத்தில் கொள்ளக் கூடிய வேறுபாடு காணப்படும் போது பொறியியல் மதிப்பீடு மீளாய்வு செய்யப்பட வேண்டிய போதிலும் அதற்குரிய கேள்வி தாரளால் பொறியியலாளர் மதிப்பீட்டில் குறிப்பிடப்பட்ட விலைகளை விட 43 சதவீதம் முதல் 87 சதவீதம் வரை குறைந்த விலை விபரங்களும் 51	பதிலளிக்கப்பட்டி ருக்கவில்லை.	பெறுகை வழிகாட்டல் கோவையின்கே ள்வி மதிப்பீடு செய்யப்பட வேண்டும்.

	சதவீதம் முதல் 211 சதவீதம் வரை கூடிய விலை விபரங்களும் சமர்ப்பிக்கப்பட்டிருந்த துடன் அந்த வேறுபாட்டிற்கு காரணங்கள் பகுப்பாய்வு செய்யப் படாமலும் முறைப்படி கேள்வி மதிப்பீடு செய்யப்படாமலும் ஒப்பந்தம் வழங்கப்பட்டிருந்தது.	

4. செயற்பாட்டு மீளாய்வு

4.1 தொலைநோக்கு மற்றும் செயற்பணி

கணக்காய்வு அவதானிப்பு	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
தேசிய சமூக நீர் வளங்கள் திணை தாபிப்பதற்கான சட்ட வரைவிற்காக அமைச்சரவை அங்கீகாரம் வழங்கி 10 ஆண்டுகள் கடந்து இருந்த போதும் மீளாய்வாண்டு இறுதி வரையில் உரிய சட்டத்தை நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை அதன் பிரகாரம் திணைக்களம் ஆரம்பி ப்பதற்குரிய அமைச்சரவை பத்திரத்தில் குறிப்பிடப்பட்ட செயற்பாடுகளை நிறைவேற்றுவதற்கு திணைக்களம் சட்டரீதியான பின்னணியை கொண்டிருக்கவில்லை.	உரிய சட்ட வரைவு 2025 மே 08 ஆம் திகதி செயலாளர் நகர அபிவிருத்தி நிர்மாணம் மற்றும் வீடமைப்பு அமைச்சுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது மேலும் இச்சட்டத்தை தயாரிப்பதற்காக நிபுணர் குழு ஒன்றை நியமிப்பதற்கும் உத்தேசிக்கப்பட்டுள்ளது.	சட்டத்தை நிறைவேற்றுவதை விரைவுபடுத்தி திணைக்களத்தின் செயற்பாடுகளை முறையாகவும் பராமரி செல்வதற்கு தேவையான சட்ட பின்னணிகள் தயாரிக்கப்பட வேண்டும்.

4.2 செயற்பாடுகளை நிறைவேற்றுதல்

கணக்காய்வு அவதானிப்பு	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
2014 யூலை மாதம் 11 ஆந் திகதிய அமைச்சரவை தீர்மானத்தின் பிரகாரம் 2024 திசம்பர் 31 ஆந் திகதி வரை பிரதான நோக்கமான கிராமிய சமூகத்திற்கு சுத்தமான குடிநீர் வழங்குவதற்காக 4442 சமூக நல அடிப்படை அமைப்புகளை அமைப்புகள் திணைக்களத்தின் பதிவு செய்யப் பட்டிருந்ததுடன் உரிய சமூக நல அமைப்புக்களை ஒழுங்குபடுத்தல்	சமூக நல அடிப்படை அமைப்புகளை ஒழுங்குபடுத்துவதற்காக தலைமை அலுவலகத்திலும் மாவட்ட அலுவலகங்களில் மூலமும் மேற்கொள்ளப்படுகின்றன. கிராமிய நீர் வழங்கள் மற்றும் சுகாநலன் துறைக்குரிய தேசிய கொள்கையை	சமூக நல அமைப்புக்கள் முறையாக மேற்பார்வை செய்தல் மற்றும் ஒழுங்குப்படுத்தி மக்களை சுத்தி சுத்தமான குடிநீரை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்க

பிரதான அலுவலகத்தாலும் அதற்கு கீழ் உள்ள மாவட்டத்தில் உள்ள 25 அலுவலகங்கள் மூலம் மேற்கொள்ளப்பட்டிருந்த போதும் அந்நடவடிக்கைகள் எதிர்பார்க்கப்பட்ட பிரகாரம் நிறைவேற்றுவதற்கு திணைக்களத்துக்கு முடியாதிருந்தது. மேலும் திணைக்களம் ஆரம்பிக்கப்பட்டு 10 ஆண்டுகள் கடந்து இருந்த போதும் திணைக்களத்தின் பிரதான செயற்பாடுகளாக இனங் காணப்பட்டிருந்த கிராமிய நீர் வழங்கள் மற்றும் சுகநல துறைக்கு உரிய அனைத்து அரசு மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களின் ஒத்துழைப்புடன் தேசிய கொள்கையை தயாரித்தல் மற்றும் நாளதுவரையாக்குதல் உட்பட நீர் முன்மொழிவு முறைமைக்கு பெற்றுக் கொண்ட நீரின் தரத்தை பரீட்சிப்பதற்காக முறையான வேலை திட்டம் ஒன்று திணைக்களத்தில் காணப்படவில்லை.	தயாரித்தல் மேற்கொள்ளப்பட்டு வருவதுடன் நீரின் தரத்தை பரீட்சிப்பதறகான நீர் பாதுகாப்புக் கொள்கையின் பிரகாரம் சட்ட ரீதியான தேவைப்பாடு ஒன்றாக இனங்காணப்பட்டுள்ளதுடன் நடவடிக்கைகள் அநேகமான மாவட்டங்களில் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.	வேண்டியதுடன் நீர் வழங்கள் மற்றும் சுக நலன் துறைக்கு உரிய தேசிய கொள்கை ஒன்றை தயாரிப்பதற்கு விரைவில் நடவடிக்கை எடுக்க வேண்டும்

4.3 எதிர்பார்க்கப்பட்ட நலன்கள் (Outcome) பெற்றுக்கொள்ளாமை

	கணக்காய்வு அவதானிப்பு	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
(அ)	தேசிய சமூக நீர் வழங்கள் திணைக்களினால் புத்தளம் மாவட்டத்தில் 04 நீர் செயற்திட்டங் களுக்காக 04 நீர் சுத்திகரிப்பு நிலையங்கள் நிர்மாணிக்கப்பட்டு சுத்திகரிப்பு இயந்திரங்கள் (Package Plant) வழங்கி பொருத்துவதற்காக தனியார் நிறுவனம் ஒன்றுக்கு 2022 மார்ச் 24 ஆம் திகதி வரை ரூபா 16,383,889 தொகை கொடுப்பனவு செய்யப்பட்டு இருந்தது. இந்த சுத்திகரிப்பு இயந்திரத்தின் மூலம் வழங்கப்படும் நீரின் தரம் தொடர்பாக நுகர்வோரின் நம்பிக்கையின்மை, அச்செயற்திட்டத்தை அண்மித்து நனோ சுத்திகரிப்பு செயற் திட்டம் காணப்படுகினற்மை போன்ற காரணத்தின் அடிப்படையில் நீரின் கேள்வி குறைவடைந்து கணக்காய்வு திகதியயான 2024 ஆகஸ்ட் 29 ஆம் தீகுதீ வரையில் இந்த	இந்த 04 செயற் திட்டங்களின் வேலை பூர்த்தி செய்து பட்டியல் கொடுப்பனவு செய்யும் சந்தர்ப்பத்திலும் இந்த இயந்திரங்கள் செயற்பாட்டு நிலைமையில் காணப்பட்டன சமூக நல அமைப்பின் சர்ச்சைக்குரிய விடயத்தின் பேரில் சுத்திகரிப்பு முறைமை பயன்படுத்தல் நிறுத்தப்பட்டிருந்தத. சமூகத்துடன் கலந்துரையாடி தீவு ஒன்றை பெற்றுக் தருமாறு உத்தியோகத்தர்கள் அறிவுறுத்தப்பட்டுள்ளனர்	இச் செயற்திட்டம் வெற்றி அளிக்காமைக்காக கவனயீனமாக செயற்பட்ட உத்தியோகத்தர்கள் தொடர்பாக தேவையான ஒழுக்கற்று நடவடிக்கைகள் எடுக்க வேண்டியதுடன் செயல் திட்டத்தை மீண்டும் செயற்படு நிலைமைக்கு கொண்டு வருவதற்கு அல்லது வேறு பொருத்தமான இடங்களில் நீர் சுத்தியகரிப்பு இயந்திரங்களை

	இயந்திரங்கள் செயற்பாட்டு நிலைமையில் இல்லாதிருந்தமை செலவிடப்பட்ட முழு தொகையும் விளைவற்றதாக இருந்தது.		ஸ்தாபிப்பதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுத்தல் வேண்டும்.
(ஆ)	புத்தளம் மாவட்டத்தில் கணக்காய்வு தெரிவு பரிசோதனைக்கு உட்பட்ட 56 சமூக நீர் அபிமானி சேயுறுதிட்டங்களில் 24 செயற்து திட்டங்களுக்கு உரிய கால ரீதியாக நீர் தரப் பரிசோதனை அறிக்கை பெற்றுக் கொள்ளப்பட்டிருக்கவில்லை. சமூக நல நீர் வழங்கல் முறைமைகளில் அதிகளவில் அதிக அளவில் நீர் தர பரிசோதனை செய்யப்பட்டு இருக்கவில்லை.	அப்பரிசோதனை மேற்கொள்ளல் நீர் பாதுகாப்பு கொள்கைக்கரிய சட்டரீதியான தேவைப்பாடுகள் அனைத்து மாவட்டங்களுக்கும் சுட்டிக் காட்டுக்கப்பட்டுள்ளன. அதன் பிரகாரம் அநேக மாவட்டங்களில் இந்நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளதுடன் அந்த தகவல்களை முகாமைத்துவ முறைமைக்கு உள்ளடக்குமாறு உத்தியோகத்தர்கள் அறிவுறுத்தப்பட்டுள்ளனர்	காலவேதியாக நீரில் தர பரிசோதனை மேற்கொள்ளப்பட்டு சுத்தமான குடிநீரை வழங்க தேவையான நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(இ)	திணைக்களத்தின் மூலம் செயற் படுத்தப்படுகின்ற சுக நலன் வசதிகள் வழங்கும் செயற்திட்டத்தின் மூலம் 2020-2022 ஆம் ஆண்டுகளில் புத்தளம் மாவட்டத்தில் 120 நலனாளிகளுக்காக ரூபா 40,000 வீதம் ரூபா 4,800,000 பணம் கொடுப்பனவு செய்யப்பட்டது. முறையான ஆய்வுகள் பரிசோதனை ஒன்றின் கீழ் அச்செயறற்பாடு நிறைவேற்றப் படாமை காரணமாக குறித்த நிர்மாணம் 2024 ஆகஸ்ட் வரையில் பூர்த்தி செய்யப்படாமல் காணப்பட்டமையால் செலுத்தப்பட்ட தொகை விளைவற்றதாக இருந்தது.	ஐநிர்மாண பூர்த்தி செய்யப்படாத நலனாலிகளிடமிருந்து பணத்தை அறவிடுவதற்கு மாவட்ட பொறுப்பு உத்தியோத்தரால் உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப் பட்டு வருகின்றது.	இந்நிகழ்ச்சி திட்டத்தை முறையான கண்காணிப்பின் கீழ் செயல்படுத்தப்பட்டு மக்களுக்கு உரிய சேவைகள் வழங்கப்பட வேண்டியதுடன் இந்நிகழ்ச்சி திட்ட முறையான கண்காணிப்பு ஒன்றின் கீழ் செயல்படுத்தாமைக் கு பொறுப்பான உத்தியோகத்தர்களு க்கு எதிராக ஒழுகாற்று நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

4.4 செயற்திட்டங்கள் பூர்த்தி செய்யாமல் கைவிடுதல்

கணக்காய்வு அவதானிப்பு	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
ரூபா 43,277,707 கூட்டுத்தொகையான பணம் செலவிடப்பட்டு நிர்மாணிக்கப் பட்டிருந்த புத்தளம் மாவட்டத்தின் மாதம்பை	புத்தளம் மாதம்பே ஹேனெபொல நில்திய தகர சமூக நல நீர் செயற்திட்டத்தின் நிர்மாணம்	செயற் திட்டத்தை விரைவில் பூர்த்தி செய்து மக்களுக்கு நீரை வழங்குவதற்கு

	ஹேனேபொல நில்திய தகர செயற்திட்டம் ககருவலகஸ்வெவ கிராம சரண செயற் திட்டம் நாத்தாண்டிய சிய சக்தி சமூக நீர் வழங்கல் செயற்திட்டம் போன்ற திட்டங்களின் நடவடிக்கைகள் வெவ்வேறு காரணங்கள் பேரில் இடைநிறுத்தப்பட்டிருந்தன.	இறுதி கட்டத்தில் உள்ளதாலும் ககருவலகஸ்வெவ கிராம சரண சமூக நல அமைப்பு மற்றும், நாத்தாண்டிய சிய சக்தி சமூக சமூக நல அமைப்பு ஆகிய அமைப்பு களுக்காக வீதி அபிவிருத்தி அதிகாரசபையால் வீதிகளுக் காக அனுமதி வழங்கப் பட்டுள்ளதால் 2025 ஆம் ஆண்டில் செயற் திட்டங்களின் அனைத்து வேலைகளையும் பூர்த்தி செய்ய உத்தேசிக்கப் பட்டுள்ளது.	தேவையான நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

4.5 செயற்திட்டங்கள் நிறைவேற்றுவதில் தாமதங்கள்

	கணக்காய்வு அவதானிப்பு	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
(அ)	சமூக நீர் அபிமான நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் 2020-2021 ஆம் ஆண்டுகளில் நிர்மாணங்கள் ஆரம்பிக்கப்பட்ட 244 செயற் திட்டங்களில் 205 உம 2019-2020 ஆம் ஆண்டுகளில் நிர்மாணங்கள் ஆரம்பிக்கப்பட்ட 05 செயற்திட்டங்களும் வெவ்வேறு காரணங்கள் அடிப்படையில் 2024 திசெம்பர் 31 ஆந் திகதி வரை பூர்த்தி செய்யப்படா திருந்ததுடன் அதற்காக ரூபா 1,754,058,041 தொகை செலவிடப பட்டிருந்தது. செயற்திட்டம் ஆரம்பிக்கப்பட்ட 5 ஆண்டுகள் கடந்து இருந்த போதும் இந்த செயற்திட்டங்களை பூர்த்தி செய்து மக்களுக்கு நீரை வழங்குவதற்கு தவறி இருந்தமையால் அதற்காக செலவிடப்பட்ட பணம் விளைவற்றதாக இருந்தது.	2020,2021,2022 ஆம் ஆண்டு களில் நாட்டில் ஏற்பட்ட கொரோனா தொற்று பொருளா தார சிக்கல், எரிபொருள் பற்றாக்குறை போன்ற விடயங்கள் காரணமாக நிர்மான நடவடிக்கைகளில் தாமதம் ஏற்பட்டது. இந்த அனைத்து செயற்திட்டங்கள் சார்பாக புதிதாக ஆய்வு செய்து 2027 ஆம் ஆண்டில் பூர்த்தி செய்வதற்கு திட்டமிடப்பட்டுள்ள துடன் முன்னுரிமை பதிவேடொன்று தயாரித்து 2025 ஆம் ஆண்டில் செயற்படுத்தப படுகின்ற திட்டத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளது	செலவிடப்பட்ட அரசின் பணத்தில் இருந்து ஆகக்கூடிய நலன்களை பெற்றுக் கொள்ளக்கூடிய வகையில் செயற் திட்டங்களை விரைவில் பூர்த்தி செய்து மக்களுக்கு சுத்தமான குடிநீரை வழங்குவதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுத்தல் வேண்டும்
(ஆ)	கேகாலை மாவட்டத்தின் மெணிக்கடவர மற்றும் மஹ பள்ளேகம கிராமங்களில் 800 குடும்பங்களின் மக்களுக்கு சுத்தமான குடிநீர் வழங்கும் நோக்கில் 2019 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட நிகழ்ச்சி திட்டத்தில் ரூபா 68,097,803 ஆன ஆரம்ப மதிப்பீடு 2023 ஆம் ஆண்டு வரை ரூபா 120,500,000 என திருத்தம் செய்யப்பட்டிருந்ததுடன்	நிர்மாண வளவில் இடம்பெற்ற மண் சரிவு காரணமாக நிர்மாணங்கள் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டதால் குழாய்கள் கள் பொருத்துதல் மற்றும் நீர் குழாய்களை பதித்தல் நடவடிக்கைகள் இடம் பெறவில்லை வழங்கப்பட்டுள்ள உபகரணங்கள் பொருத்தும்	இச்செயற் திட்டத்தினை விரைவில் பூர்த்தி செய்து மக்களுக்கு சுத்தமான குடிநீர் வழங்க வேண்டியதுடன் நடவடிக்கைகளை முறைப்படி திட்டமிடப்பட்டு

அது வரையில் நிர்மாணங்கள் மற்றும் குழாய்கள் மற்றும் உதிரிபாகங்கள் கொள்வனவு ரூபா 32,863,884 தொகை செலவிடப்பட்டு இருந்தது. இங்கு மண்சரிவுக்கு உட்படுவதை பாதுகாப்பதற்காக ரூபா 2,031,924 செலவிடப்பட்டு நிர்மாணிக்கப்பட்டிருந்த ஓரச் சுவர் போதியளவு இல்லாததன் பேரில் புவிச் சரிதவியல் மற்றும் சுரங்க பணியகத்தின் பரிந்துரையின் பிரகாரம் ரூபா 25,113,347 ஆன மதிப்பீட்டு கிரயத்தின் மீது நிர்மாணிப்பதற்காக புதிய ஒப்பந்தக்காரர் ஒருவர் தெரிவு செய்யப்பட்டு இருந்தார். அத்தோடு ரூபா 1,459,604 தொகை செலவிடப்பட்டு நிர்மாணிக்கப்பட்ட கிணற்றின் நீர் போதியளவு இல்லாமையால் அது பயன்பாட்டுக்கு எடுக்கப்படாது ,ருந்ததுடன் நீர் சுத்திகரிப்பு நிலையத்தை நிர்மாணிப்பதற்காக காணி மற்றும் வீதி நிர்மாணத்திற்காக (Site Work) ரூபா 917,345 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்த போதும் 2025 மார்ச் வரையிலும் சுத்திகரிப்பு நிலையம் வந்து நிர்மாணிக்கப்பட்டு இருக்கவில்லை. மஹபள்ளேகம கிராமத்திற்காக வினியோகிக்கப பட்டிருந்த குழாய் கிணற்றிலிருநருந்து நீரை பெற்றுக்கொண்டு பம்பியறைக்கும் நீரை பரிந்துரைக்கும் முறையொன்று நிர்மாணிப்பதற்காக ரூபா 40,304,273 ஆன ஒப்பந்தம் 2024 ஆம் ஆண்டின் யூலை 24 ஆந் திகதி தனியார் நிறுவன மொன்றுக்கு வழங்கப்பட்டிருந்தது. அந்த ஒப்பந்தம் 2024 நவம்பர் 01 ஆந் திகதி பூர்த்தி செய்யப்பட வேண்டிய போதிலும் 2024 திசெம்பர் 31 ஆந திகதி வரை ரூபா 17,718,047 தொகை செலவிடப்பட்டிருந்த போதும் வேலை பூர்த்தி செய்யப்பட்டு இருக்கவில்லை. 2024 திசெம்பர் 31 ஆந திகதி வரை இச்செயற்திட்டம் ஆரம்பிக்கப்பட்டு 05 ஆண்டுகள் கடந்து இருந்தும் ரூபா 50,581,931 கூட்டுத்தொகையான பணம் செலவிடப்பட்டிருந்த போதும் எந்த ஒரு பாவனையாளருக்கும் நீரை வழங்கு வதற்கு தவறியிருந்தது.

வரையில் முறையாக சமூக நல அமைப்பின் முறையாக களஞ்சியப்படுத்துமாறு அறிவிக்கப்பட்டிருந்ததது. சுத்திகரிப்பு நிலையத்திற்கான காணி மற்றும் சுத்திகரிப்பு நிலையத்திற்கு செல்லும் வீதி நிர்மானத்திற்காக ரூபா 917,345 கொடுப்பனவு செய்யப்பட்டுள்ளது. எனினும் ,ச்செயற்திட்டத்தை மிகவிரைவில் பூர்த்தி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக

செயல்படுத்தாமல் அரசின் பணத்தை சிக்கனம் மற்ற வகையில் செலவிடுவதற்கு நடவடிக்கை எடுத்த உத்தியோகத்தர்கள் தொடர்பாக தேவையான ஒழுக்கற்று நடவடிக்கை எடுத்தல் வேண்டும்

4.6 பணம் விடுவிக்கப்பட்டிருந்த போதும் செயன்முன்னேற்றம் அடைந்திராத செயற்திட்டங்கள்

கணக்காய்வு அவதானிப்பு	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
சிறுநீரக நோயால் அவதியுறும் மக்களுக்காக 11 மாவட்டங்களில் 140 நானோ சுத்திகரிப்பு இயந்திரங்கள் ரூபா 400,393,519 தொகையான ஒப்பந்த பெறுமதிக்கு 10 மாதங்களில் பொருத்துவதற்காக 2021 ஆம் ஆண்டில் தனியார் நிறுவனம் ஒன்றுடன் ஒப்பந்தம் கையளிக்கப்பட்டு இருந்தது. 04 மாவட்டங்களில் 5414 நலனாலி களுக்காக நிறுவப்பட்ட ரூபா 47,372,019 கிரயமான 18 இயந்திரங்கள் 2025 ப்பெரவரி வரையில் செயற்படும் நிலையில் காணப்படாதிருந்ததுடன் 04 மாவட்டங் களில் 25497 நலனாலிகளுக்கு ரூபா 183,451,853 தொகை செலவிடப் பட்டு நிறுவப்பட்ட 54 நனோ சுத்திகரிப்பு இயந்திரங்களில் இருந்து 3835 நலனாலிகளுக்கு மாத்திரம் நீரை வழங்கக் கூடியதாக இருந்தது. 2025 பெப்ரவரி வரையில் 7,310 நலனாளிகளுக்கு வழங்குவதற்கு திட்டமிடப்பட்ட 22 சுத்திகரிப்பு இயந்திரங்கள் நிறுவப்பட்டிருக்க வில்லை. கிளிநொச்சி வவுனியா முல்லைதீவு ஆகிய மாவட்டங்களில் ரூபா 193,898,520 ஆன 50 நனோ இயந்திரங்கள் நிறுவுவதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதும் 2024 ஆம் ஆண்டின் நவம்பர் மாதம் வரையில் கொடுப்பனவு பூர்த்தி செய்த பட்டியலின் பிரகாரம் செய்யப்பட்ட வேலையின் பெறுமதி ரூபா 174,274,077 ஆக இருந்தது. அதன் பிரகாரம் உடன்படிக்கை செய்யப்பட்ட ஏற்பாடுகளில் ரூபா 19,619,443 ஆன வேலை பகுதிகள் நிறைவேற்றப்பட்டு இருக்கவில்லை. இந்த இயந்திரங்களின் பொருத்துதல்கள் அங்கீகரிக்கப்பட்ட தரத்தின் பிரகாரம் மேற்கொள்ளப் படாமல் இருந்ததாக கணக்காய்வு தெரிவுக் பரிசோதனைகளின் போது கண்டறியப்பட்டிருந்ததுடன் குறித்த மின்சாதனங்கள் பொருத்தப்படாமல்	இந்த ஒப்பந்தத்தின் மூலம் புத்தளம் மாவட்டத்தில் நிர்மாணிக்கப்பட்ட நனோ சுத்திகரிப்பு இயந்திரங்கள் அனைத்தும் தற்போது நீரை வழங்குகின்றது குருநாகல் மற்றும் மொனறாகல் மற்றும் அநுராதபுரம் ஆகிய மாவட்டங்களில் உத்தேச 42 திட்டங்களில் 19 செயப்படுகின்றவதுடன் 14 நிர்மான மட்டத்தில் காணப்படுகின்றன ஏனைய 09 செயற்த திட்டங்களின் நிர்மாணத்தை நிறுத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. காதார பிரிவு தொடர்படுத்த பட்டு மக்கள் மக்களை அறிவூட்டும் நிகழ்ச்சிகள் நடத்துவதற்கு திட்டமிடப் பட்டுள்ளது வவுனியா செலலிஹினிகமவில் நிர்மாணிக்கப்பட்ட நீர் சுத்திகரிப்பு இயந்திரத்தின் பம்பி காணாமல் போயிருந்தமை தொடர்பாக போலீசில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது, இந்த சுத்திகரிப்பு நிலையத்திற்காக ,டம் ஒன்றை தீர்வு செய்வதற்கு நகர அபிவிருத்தி நிர்மாண மற்றும் வீடமைப்பு அமைச்சின் தேசிய சமூக நீர் வளங்கள் திணைக்களத்தின் மாவட்ட உத்தியோகத்தர்கள் மற்றும் அரசியல் அதிகாரிகள் தொடர்பு பட்டிருந்தனர். ,ச் அசளயற்த்திட்டத்தின் மக்கள் உரித் தாக்கப்படும் வரை தேசிய நீர் வழங்கள் மற்றும் வடிகால் அமைப்பு சபையால் இந்தப் பிரதேசத்தை மேவுகை செய்யப்படாதிருந்தலுடன் பின்னர் நீர் வழங்கள் மற்றும் வடிவமைப்பு சபையால் நீர்	நிர்மாணிக்கப்படுகின்ற அனைத்து நஆகத சுத்திகரிப்பு இயந்திரங்களை பயன்பாட்டுக்கு எடுப்பதற்கும் இலத்திரப்பட்ட முக்கிய நலனாளிகளுக்கு நீரை வழங்குவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் .இயந்திரங்களின் பாதுகாப்பாக பராமரித்து பேணி செல்லுதல் உத்தியோத்தர்களின் பொறுப்பாக இருப்பதால் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும் ,

இருக்கையில் மற்றும் சில இடங்களில் மற்றும் நீர் மோட்டார் மற்றும் பம்பி இல்லாதிருக்கையில் பொறியியலாளர் மற்றும் தொழில்நுட்ப உத்தியோகத்தர்களால் வேலை பூர்த்தி செய்யப்பட்டதாக வழங்கப்பட்ட சான்றிதழ்கள் மீது கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.	வழங்கப்பட்டுள்ளது	

4.7 பெறுகைகள்

கணக்காய்வு அவதானிப்பு	**கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை**	**பரிந்துரை**
களுத்துறை புளத்சிங்கள வடக்கு நகர அபிவிருத்தி மன்றத்தின் செயற் திட்டத்திற்கு ரூபா 35,376,959 பெறுமதியான GI குழாய்கள் மற்றும் உதிரி பாகங்கள் 2024 மார்ச் 15 ஆம் திகதி தனியார் நிறுவனமென்றிடம் இருந்து கொள்வனவு செய்யப் பட்டிருந்தது.. கேள்விதாரரால் சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பீடு பொறியியலாளர் மதிப்பீட்டை விட ரூபா 6,496,371 அதாவது 17.39 சதவீததினால் அதிகரித்திருந்ததுடன் பெறுகை வழிகாட்டல் கைநூலினன் 7.9.2.(க) ,ன் பிரகாரம் விலகலுக்கான காரணங்கள் பகுப்பாய்வு செய்யப்பட்டு இருக்கவில்லை. இந்நீர் குழாய்கள் பதிக்கும் நடவடிக்கைகள் சமூக அமைப்பிலான அடிப்படையிலான அமைப்பினால் நிறைவேற்றப்பட்டிருந்ததுடன் அந் நடவடிக்கைகள் 2024 மே 16 ஆம் திகதி அளவில் பூர்த்தி செய்யப்பட வேண்டிய போதிலும் கணக்காய்வு திகதியான 2025 ஜனவரி வகையில் பூர்த்தி செய்யப்பட்டு இருக்கவில்லை.	GI மற்றும் உப பாகங்கள் கொள்வனவு ABC Trade & Investment (Pvt) Ltd என்ற ஒப்பந்த நிறுவனத்திற்கு வழங்கப்பட்டுள்ளதுடன் அதன் பொறியியலாளர் மதிப்பீட்டு தொகையை விட ஒப்பந்தக் காரரால் சமர்ப்பிக்கப் பட்டிருந்த விலையில் கூடிய உருப்படியொன்றை பொறியியலாளர் மதிப்பீட்டுத் பெறுமதிக்கு மேற்கொள்வது சிக்கலாக இருப்பதால் மொத்த கேள்வி தொகையிலிருந்து ரூபா 400,000 கழிக்கப்பட்டுள்ளது.	பெறுகை நடவடிக்கைகளுக்காக செலவிடப்படுகின்ற அரசின் பணத்திலிருந்து ஆகக்கூடிய நலன்களை பெற்றுக் கொள்ளக்கூடிய வகையில் செயற்திட்டத்தை பூர்த்தி செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்

4.8 சொத்துக்கள் முகாமைத்துவம்

	கணக்காய்வு அவதானிப்பு	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
(அ)	சமூக நீர் அபிமானி நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் புத்தளம் மாவட்டத்தில் நிர்மாணிக்கப்பட்டிருந்த 07 சமூக நீர் செயற்திட்டங்கள் 2024 ஒக்டோபர் வரையிலும் செயற்படாததன் காரணமாக 2023 திசெம்பர் மாதம் செயற்திட்டத் திற்காக வழங்கப் பட்டிருந்த ரூபா 23,492,999 பெறுமதி யான PVC குழாய்கள் மற்றும் ரூபா 10,112,025 பெறுமதியான நீர்மானிகள் வீடுகளிலும் விஹாரை களிலும் பொது இடங்களிலும் பாதுகாப்பற்ற வகையில் குவிக்கப்பட்டு இருந்ததுடன் அது தொடர்பாக திணைக்களத்துக்கு அறிவிக்கப்பட்டிருந்த போதும் அது தொடர்பாக எந்த ஒரு நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.	புத்தளம் மாவட்டத்தின் 5 செயற் திட்டங்களின் நிர்மாண வேலைகள் தற்போது பூர்த்தி செய்யும் கட்டத்தில் காணப்படுவதுடன் நாத்தாண்டிய கும்மோதர சிய சக்தி சமூக அமைப்பு மற்றும் மகஹாவெவ கல்முள்ள ஐக்கிய சன சமூக அமைப்பு சேற்றுத்தத்தின் மதிப்பீட்டை தயாரிக்கப்பட்முள்ளதுடன் பெறுகை நடவடிக்கைகள் மேற்கொள்வதற்கு உள்ளதாக	அரசின் பணத்தை செலவிட்டு தேவைபாட்டுக்கு முன்னர் கொள்வனவு மேற்கொண்டு உபகரணங்களை அழிவடைவதற்கு இடம் அளிப்பது தொடர்பாக உத்தியோகத்தர்களுக்கு எதிராக தேவையான ஒழுக்காற்று நடவடிக்கைகள் எடுக்க வேண்டியதுடன் சமூக நீர் செயற்திட்டங்களை பூர்த்தி செய்வதை துரிதமாக்குதல் வேண்டும்
(ஆ)	மெனிக்கடவர சிய லெச குடிநீர் செயல்திட்டத்திற்காக கொழள்வனவு செய்யப்பட்டிருந்த ரூபா 4,315,000 ஆன நீர் தம்பி மற்றும் உதிரிபாகங்கள் ரூபா 4,290,300 ஆன 945 நீர் மானிவரும் 02 ஆண்டுகளுக்கு அண்மித்த காலமாக எவ்வித பயன்பாட்டுக்கு எடுக்கப்படாமல் களஞ்சியப்படுத்தி வைக்கப்பட்டு ,ருந்தன. அவ்வாறே 2020 ஒக்டோபர் மாதம் ரூபா 9,110,151 செலவில் கொள்வனவு செய்யப்பட்டிருந்த நீர் குழாய்கள் மற்றும் உதிரி பாகங்களில் ,ருந்து அதிக அளவில் 2024 திசெம்பர் 31 ஆந் திகதி வரை பயன்பாட்டுக்கு எடுக்கப்படாமல் பாதுகாப்பற்ற இடங்களில் களஞ்சியப்படுத்தப்பட்டி ருந்ததுடன் அவை அழிபடைந்து வருகின்றன.	ந்த செயற் திட்டத்திற்காக வழங்கப்பட்டிருந்த பம்பியை ஏனைய பொருத்தமான சமூக அமைப்புக்கு வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்குமாறும் வழங்கப்பட்டிருந்த நீர் குழாய்களை பாதுகாப்பான ,டத்தில் களஞ்சியப்படுத்துவதற்கும் சமூக அமைப்பு அறிவுறுத்தப்பட்டுள்ளதாக	அரசின் பணத்தை செலவிட்டு தேவைபாட்டுக்கு முன்னர் கொள்வனவு மேற்கொண்டு உபகரணங்களை அழிவடைவதற்கு இடம் அளிப்பது தொடர்பாக உத்தியோகத்தர்களுக்கு எதிராக தேவையான ஒழுக்காற்று நடவடிக்கைகள் எடுக்க வேண்டியதுடன் பயன்பாட்டிற்கு எடுக்க கூடிய உபபாகங்களை பயன்பாட்டிற்கு எடுப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

(இ)	2023 திசெம்பர் மாதம் 07 மாவட்டங்களில் 08 சமூக அடிப்படை அமைப்புக்களுக்குா வழங்கப்பட்டிருந்த 1208 நீர்மானகளில் ரூபா 9,267,055 பெறுமதியான 908 நீர்மானிகள் 2025 மார்ச் 31 ஆம் திகதி வரையிலும் பயன்பாட்டிற்கு எடுக்கப்பட்டிருக்கவில்லை. செயற்திட்டங்கள் பூர்த்தி செய்யப்பட்டதன் பின்னர் தேவைப்படும் இந்த உப பாகங்கள் தேவைப்பாட்டை கருத்திலற் கொள்ளாமல் கொள்வனவு செய்யப்பட்டிருந்ததுடன் அதற்காக வழங்கப்பட்டிருந்த உத்தரவாத காலமும் முடிவடைந்திருந்தது.	செயற்திட்டத்தின் நிர்மாண நடவடிக்கைகளில் தாமதம் நலனாலிகளால் நீர் ,ணைப்பு தொடர்பான கட்டணங்களை செலுத்தாமை, சுற்றாடல் சிக்கல்கள் காரணமாக செயற்திட்டத்தின் வேலைகள் நிறுத்தப்பட்டுள்ளமை போன்ற காரணங்களின் பேரில் நீர்மானிகள் பொருத்துவது தாமதமாகியுள்ளதுடன் பயன்படுத்தாத நீர்மானகளை மாவட்டத்தின் ஏனைய தேவைகள் உள்ள சங்கங்களுக்கு வழங்குமாறு உத்தியோகத்தர்கள் அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.	தேவைப்பாட்டை கருத்தில் கொள்ளாமல் கொள்வனவு செய்து உபகரணங்களை அழிவடைவதற்கு இடமளித்தல் மற்றும் அரசின் பணத்தை கவனயீனமாக பயன்படுத்துவது தொடர்பாக உத்தியோதர்களுக்கு எதிராக தேவையான ஒழுக்கற்று நடவடிக்கைகள் எடுக்க வேண்டியதுடன் காணப்படுகின்ற நீர்மானி இருப்பபினை பயன்பாட்டிற்கு எடுக்கப்பட வேண்டும்.
(ஈ)	நீர் வழங்கள் மற்றும் சுக நலன் பாதுகாப்பு சேவை செயறதிட்டத்தின் மூலம் தேசிய சமூக நீர் வழங்கள் திணைக்களத்திற்கு வழங்கப்பட்டிருந்த நடமாடும் நீர் பரிசோதனை வண்டி 2024 செப்டம்பர் 27 ஆந திகதி முதல் எவ்வித பரிசோதனை நடவடிக்கைகளுக்கும் ஈடுபடுத்தாமல் லக்திய மெதுர வளவில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது.	நீர் பரிசோதனைகள் நடவடிக்கை களுக்காக தேவையான உத்தியோகத்தர்கள் இல்லாததால் இந்த வண்டி பயன்படுத்தப்படவில்லை என்பதாக	நீர் பரிசோதனை வண்டியை அழிவதற்கு இடம் அளிக்காமல் பயன்பாட்டுக்கு எடுப்பதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுத்தல் வேண்டும்.

4.9 நட்டங்களும் சேதங்களும்

கணக்காய்வு அவதானிப்பு	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
காலி இமதுவ சவிய நீர் செயறதிட்டத்திற்காக ரூபா 251,163 தொகை காலி மாவட்ட நிலைய பொறுப்பு உத்தியோகத்ததரின் தனிப்பட்ட சேமிப்பு கணக்கிக்டு செலவு வைக்கப்பட்டிருந்தது இந்த முறையற்ற பயன்பாடு தொடர்பாக நிதி பிரமாணம் 156 மற்றும் தாபன	இது தொடர்பாக புலனாய் வொன்றினை நடத்தி புலனாய்வு அறிக்கையை பெற்றுக் கொள்ளப்பட்டுள்ளது அதன் பிரகாரம் எதிர்வரும் நடவடிக்கை மேற்கொள்வதற்கு உள்ளது.	இது தொடர்பாக நிதி பிரமாணம் 156 மற்றும் தாபன விதிக் கோவையின் உரிய ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்

விதிக் கோவையின் II ஆம் தொகுதியின் XLVII ஆம் அத்தியாயத்தின் 5.3 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டிய போதிலும் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

4.10 முகாமைத்துவ பலவீனங்கள்

	கணக்காய்வு அவதானிப்பு	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
(அ)	திணைக்களத்தின் மூலம் செயறபடுத்தப்படுகின்ற சமூக நீர் செயற்து தங்கள் தொடர்பாக 2021-2024 ஆம் ஆண்டுகளின் போது மேற்கொள்ளப்பட்ட தெரிவு கணக்காய்வு பரிசோதனைகளின் போது நீர் செயற்திட்ட நிர்மாண ஒப்பந்தங் களில நிறைவேற்றப்படாத செயற்பாடு களுக்காக கூடுதலான கொடுப்பனவு செய்த 23 சந்தர்ப்பங்களுக்காக ரூபா 20,338,157 கொடுப்பனவு செய்யப்பட்டு இருந்தமை அவதானிக்கப்பட்டது. அந்த வெளிப்படுத்தலுக்கு உரிய ஆரம்ப பரிசோதனை நடத்தி பரிந்துரைகளை செயல்படுத்தும் போது திணைக்களத்தின் மூலம் வழிகாட்டல்கள் சுற்றறிக்கைகள் மூலம் அவ்வப்போது அறிமுகப்படுத்தப்பட்டிருந்த விடயங்கள் தொடர்பாக கருத்தில் கொள்ளுமாறு ஆலோசனைகள் மற்றும் எச்சரிக்கைகள் கடிதங்கள் மாத்திரம் வழங்கப்பட்டுள்ளதுடன் அது தொடர்பாக நிதிப் பிரமாணம் 156 பிரகாரம் நட்டங்களை ஏற்படுத்திய உத்தியோகத்தருக்கு எதிராக தாபன விதிக் கோவையின் II ஆம் தொகுதியின் XLVIII ஆம் அத்தியாயத்தின் பிரகாரம் ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை	பதில் அளிக்கப்பட்டிருக்கவில்லை.	கணக்காய்வில் சுட்டிக் காட்டப்பட்டுள்ள விடயங்கள் தொடர்பாக நிதிப்பிரமாணங்கள் மற்றும் தாபன விதிக கோவையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்து அரசுக்கு ஏற்பட்ட நட்டங்களை மேவுகை செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டியதுடன் நிதிப் பிரமாணம் 128 இன் பிரகாரம் திணைக்கின் செயற் திறனின்மை நிதி கட்டுப்பாடு தொடர்பாக நிறுவன தலைவர் பொறுப்பு கூற வேண்டும்
(ஆ)	2022 மே 22 ஆந் திகதிய 22/0508/414/003 ஆம் இலக்க அமைச்சரவை தீர்மானம் மற்றும் 2022 ஏப்ரல் 26 ஆந் திகதிய தேசிய பாதீட்டு சுற்றறிக்கை இலக்கம் 03/2022 அடிப்படையாகக் கொண்டு	பதில் அளிக்கப்படவில்லை	திட்டமிடல் மற்றும் ஆய்வின்றி செயற்திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டு அரசின் பணம் விளைவற்ற வகையில்

திணைக்களத்தினால் 2021 மற்றும் 2023 ஆம் ஆண்டு களில் வழங்கப்பட்டிருந்த ரூபா 301,565,687 ஆன நீர் செயற்திட்ட நிர்மான ஒப்பந்தங்கள் 31 புரிந்துணர்வுடன் முடிவுறுத்தப் பட்டிருந்ததுடன் அவற்றில் செய்யப்பட வேண்டிய வேலை பெறுமதி ரூபா 107,796,837 ஆக இருந்தது. 50 சதவீத மேற்பட்ட வேலை பூர்த்தி செய்யப்பட்ட வேலைகளின் பெறுமதி ரூபா 52,787,337 ஆக இருந்ததுடன் இருந்த 14 ஒப்பந்தங்களும் அதற்கு இடையே இருந்தன. 2024 ஜனவரி 10 ஆம் திகதி 01/2024 -ஆம் இலக்க தேசிய பாதீட்டு சுற்றறிக்கை மூலம் மேற்படி சுற்றறிக்கை இரத்துச் செய்யப் பட்டிருந்த போதும் அத்திகதியின் பின்னரும் ரூபா 180,951,202 தொகையான 20 செயற்திட்டங்கள் இரத்துச் செய்யப்பட்டிருந்தன.. இந்த ஒப்பந்தங்களை இரத்துச் செய்யும் சந்தர்ப்பங்களில் 13 ஒப்பந்தங் களுக்காக வழங்கப்பட்டிருந்த ரூபா 29,310,783 ஆன முற்பண பிணை முறிகளும் 14 ஒப்பந்தங்களுக்கு வழங்கப்பட்டிருந்த ரூபா 6,346,593 செயலாற்றல் பிணையும் காலா வதியாகி இருந்ததன..		,ருப்பதற்கு இடம் அளிக்கப்பட்டு நட்டங்களை ஏற்படுத்துவதற்குரிய உத்தியோகத்தர்களுக் கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கைகள் எடுக்க வேண்டியதுதனுடன் இச்செயற் திட்டத்தினை முறைப்படி செயல்படுத்தாமல் ஊடாக அரசுக்கு ஏற்பட்ட நட்டங்களை உரிய பொறுப்பான உத்தியோகத்தர்களிட மிருந்து அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

5 நல்லாளுகை

5.1 உள்ளகக் கணக்காய்வு

கணக்காய்வு அவதானிப்பு	**கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை**	**பரிந்துரை**
2019 ஜனவரி 12 திகதிய இலக்கம் DMA/01-2019 இலக்கங் கொண்ட கணக்காய்வு மற்றும் முகாமைத்துவத் திணைக்களத்தின் சுற்றறிக்கையின் 03 ஆம் பந்தி மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் பிரிவு 40 இற்கு இணங்க உள்ளக கணக்காய்வாளர் ஒருவர் நியமிக்கப்படாமல் இருந்தலுடன் 2020 ஆம் ஆண்டு திணைக்களத்திற்கு நியமிக்கப்பட்ட	செயலாளர் நகர அபிவிருத்தி அமைச்சு மற்றும் நீர் வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி அமைச்சினால் திணைக்களத்திற்காக உள்ளக கணக்காய்வாளர் ஒருவரை பெற்றுக் கொள்வ தற்குரிய வேண்டுகோள் DNCWS/ADM/05/01/VOL-ii ஆம் இலக்க 2025 ஏப்ரல் 03 ஆந்	பொருத்தமான உள்ளக கணக்காய்வாளர் ஒருவரை நியமித்து உள்ளகக் கணக்காய்வு அலகொன்று நிறுவி உள்ளக கட்டுப்பாடு பலப்படுத்த வேண்டும்

உள்ளக கணக்காய்வு உத்தியோகத்தரை முறையான அங்கீகாரம் இன்றி பணிப்பாளர் நாயகத்தினால் திணைக்களத்தின் கணக்காளராக 2021 ஆம் ஆண்டில் நியமிக்கப்பட்ட காரணத்தினால் அதிகதி முதல் அப்பதவி வெற்றிடமாக உள்ளது	திகதிய கடிதத்தின் மூலம் பணிப்பாளர் நாயகம் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது	

6. மனிதவள முகாமைத்துவம்

கணக்காய்வு அவதானிப்பு	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு சிரேஷ்ட மட்டத்தில் அங்கீகரிக்கப்பட்ட 36 பதவிகளில் 18 பதவிகள் உட்பட அனைத்து தொகுதிகளிலும் வெற்றிட எண்ணிக்கை சுமார் 21 சதவீதத்தில் காணப்பட்டது. சிரஷ்ட மட்டத்தில் அங்கீகரிக்கப்பட்ட 03 பதவிகளுக்காக 03 முழு நேர வேலை பதில் கடமை நியமனங்கள் மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன் அங்கீகரிக்கப்பட்ட பதவிகளுக்காக ஒப்பந்த அடிப்படையில் 09 ஊழியர்கள் ஆட்சே சேயுறுது செய்யப்பட்டு இருந்தனர்.	அரசாங்க சேவைக்கு புது ஆட்சேர்ப்புக்கள் மட்டுப படுத்தப்பட்டமையால் இது வரை உத்தியோகத்தர்கள் இணைத்தல் மேற்கொள்ளப் படவில்லை.. பணிப்பாளர் நாயகம் பதவிக்காக அமைச்சரவை தீர்மானத்தின் பிரகாரம் முழுநேர பதில் கடமை புரிவதற்காக நியமிக்கப்பட்டுள்ளார்.். பணிப்பாளர் (திட்டமிடல்) மற்றும் பணிப்பாளர் (தொழிற்பாடு மற்றும மதிப்பீடு) ஓராண்டு காலம் வரை அல்லது வெற்றிடம் பூர்த்தி செய்யப்படும் திகதி ஆகிய இரண்டு திகதிகளில் முதலாவது வரும் திகதி குறிப்பிட்டு கால எல்லை காணப்படுகின்ற பிரகாரம் அரசாங்க சேவைகள் ஆணைக் குழுவினால் முழுநேர பதில் கடமை நியமனம் செய்யப்பட்டுள்ளது..	திணைக்களத்தின் பதவியணி முறைப்படி இனங்காணப்பட்டு அங்கீகரிக்கப்பட்ட பதவியணியை திருத்தம் செய்வதற்கும் தேவையான பதவிவியணியினரை ஆட்சேர்க்க வேண்டும்.